முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் சிவயோகமாமுனிவர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

30.03.2019, சனிக்கிழமை

1. **தருமத்தின் காவலனே அரங்கா**
**தரணியெங்கும் தருமம் பெருக்கி**
**கருமவினை விரட்டி மீட்டிட**
**காவலனாக வந்த தேசிகா**

2. தேசிகனே உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் நித்ய பிரசன்ன ஆசி
ஆசிபட **விளம்பி சேலின் திங்கள்**
**அறிவிக்க மூவையோர் திகதி காரி வாரம்**
**(விளம்பி வருடம் பங்குனி மாதம் 16ம் நாள் 30.03.2019, சனிக்கிழமை)**

3. வாரமதில் சிவயோக மாமுனிவர் யானும்
வழங்கிடுவேன் உலகோர் நலமுற
அறமெனும் அன்னதானமதை
அகிலத்தார் அரங்கன் தலைமை தன்னில்

4. தன்னிலே ஏற்று வருதலுற
தருமபலம் பெருக்கி வருகவே
மண்ணுலகே தருமலோகமாகி
மகான் அரங்கன் காட்டுகின்ற

5. காட்டுகின்ற ஞானபலம் பெருகி
கலியுகம் பெரும் மாறுதல் காணும்
வாட்டமான வறுமை கொடுமை
வக்ர வஞ்சம் சூழ்ச்சி பகைமை மிகுந்த

6. மிகுந்த இன்னல்கள் யாவும்
மண்ணுலகை விட்டு அகல நேரும்
தகுந்த ஞானமும் தெளிவும்
தன்னம்பிக்கை மிகுந்த மக்களாய்

7. மக்களிடை தன்னார்வ சேவையும்
மகத்துவமுள பண்புகளும் பெருகி
தேக்கமிலா வளர்ச்சி காணும்
தெய்வீக நல்லுலகம் ஆகும்

8. ஆகவே அரங்க மகானே
ஆறுமுகன் அவதாரமாக வந்து
யுகமாற்ற உயர் சேவையிலிருக்க
உலகோரே துறையூர் மண்ணில்

9. மண்ணிலே பிரணவக் குடிலை
மகத்துவமிக்க அருட்குடிலை
எண்ணமெல்லாம் நிரம்பிட அணுகி
எல்லா மக்களும் பேதம் கருதா

10. கருதா அரங்கன் சேவையில்
கலந்து இணைந்து துணைபட
உறுதி கொண்டு தொடர்ந்து வர
உலகமே ஞானபலம் பெறும்

11. பலமான ஞான ஆட்சியாக
பாலமுருகன் அருள் தயவுபட
வளம் பெறும் ஞானயுகமாக
வழுத்திய நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் சிவயோகமாமுனிவர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :**

உலகின் தர்மத்தினை காத்தருளும் தர்மத்தின் காவலனே ஆறுமுக அரங்கமகா தேசிகனே உலகமெங்கும் தர்மங்களை அளவிலாது பெருக்கி மக்களின் கருமவினைகளை விரட்டி மக்களை மீட்டு காத்திட உலகின் காவலனாக அவதாரமாக வந்திட்ட ஞானதேசிகனே அரங்கமகா தேசிகனே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலன் கருதி **விளம்பி வருடம் பங்குனி மாதம் 16ம் நாள் 30.03.2019, சனிக்கிழமையான** இன்றைய தினமதனிலே நித்ய பிரசன்ன ஆசி நூல்தனையே சிவயோகமாமுனிவர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் சிவயோகமாமுனிவர்.

அறம் என்கிற அன்னதானமதை உலக மக்களெல்லாம் ஆறுமுக அரங்கமகா தேசிகனார் தலைமையில் ஏற்று தருமங்களை உலகமெங்கும் செய்து வர, உலகினில் தருமபலம் பெருக்கி வரவர, உலகமே தருமலோகமாக ஆகி, மகான் ஆறுமுக அரங்கமகா தேசிகனார் காட்டும் ஞானபலம் பெருகி, கலியுகம் பெரும் மாற்றங்களை காணும், மக்களைத் துன்புறுத்தும் வறுமை கொடுமைகள் வக்ர எண்ணங்களும் விலகி வஞ்சம் சூழ்ச்சி, பகைமை மிகுந்த இன்னல்கள் யாவும் இவ்வுலகை விட்டு அகன்றிடும்.

மக்களுக்கு உள்ள அறியாமை எனும் இருள் நீங்கி, ஞானம் எனும் ஒளி பிறந்து, அறிவு தெளிவும் ஞானமும் பெருகி தன்னம்பிக்கை மிகுந்து மக்களிடத்து பொதுநலம் பெருகி தன்னார்வமாய் தொண்டுகளை உலகோர்க்கு செய்து, பெருமைமிக்க பண்புகளும் பெருகி உலகம் தடையற்ற வளர்ச்சியினை காணும். இவ்வுலகினில் தெய்வீக சக்திகள் பெருகி உலகமே தெய்வீக உலகமாக மாறும். தெய்வீக உலகினில் கலியுக காவல் தெய்வம் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரும் முருகப்பெருமானின் அவதாரமாக வந்துதித்து யுகமாற்றம் செய்கின்ற உயர்வான தொண்டுகளை செய்து வருகின்றார்.

உலக மக்களே ஞானபூமியாம் துறையூரிலே ஏழாம் படை வீடாய் உள்ள ஓங்காரக்குடிலிற்கு அவரவரும் மனம் விரும்பியவாறு எண்ணமெல்லாம் நிரம்பியவாறு மனம் விரும்பி அணுகி பேதாபேதமின்றி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் சேவைகளில் கலந்து இணைந்து, அரங்கனின் பணிகளுக்கு துணையாய் இருந்து உறுதியுடன் செயல்பட்டு அரங்கனை பின்தொடர்ந்து வர, உலகம் முழுதும் ஞானபலம் பெற்று உலகினில் பலமான ஞானஆட்சியும் அமைந்திடும். உலகினில் ஞானஆட்சி முருகப்பெருமானின் கருணையால் தயவினால் உண்டாகி, உலகமே வளம் பெறும், உலகம் ஞானயுகமாக மாறிடும் என கூறுகிறார் மகான் சிவயோகமாமுனிவர்.

–சுபம்–